**இலங்கை புகையிரத திணைக்களத்தில் புகையிரத மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப சேவையில் வரைஞர் (சிவில்/சமிக்ஞை/இயந்திரவியல்) பயிற்சியளித்தல் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2026.**

இலங்கை புகையிரத திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப சேவையில் வரைஞர் (சிவில்/சமிக்ஞை/இயந்திரவியல்) பயிற்சியளித்தல் தரத்தில் அவ் அவ் பதவிகளுக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2026.12.14 ஆம் திகதிக்கு 18 வயதுக்கு குறையாத மற்றும் 30 வயதினை விஞ்சாத இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. புகையிரத திணைக்களத்தின் சேவை தேவைப்பாட்டின் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் கீழே காட்டப்பட்டுள்ள பதவியொன்று தொடர்பில் நியமிக்கப்படுவதோடு நியமனம் வழங்கப்பட்டதன் பின்னர் பதவிகளுக்கு இடையில் மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

| | பதவிப் பெயர் | தரம் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | வரைஞர் (சிவில்) | பயிற்சியளித்தல் தரம் | 8 |
| 2 | வரைஞர் (சமிக்ஞை) | பயிற்சியளித்தல் தரம் | 1 |
| 3 | வரைஞர் (இயந்திரவியல் | பயிற்சியளித்தல் தரம் | 7 |

01. விண்ணப்பம் கோரப்படும் பதவி :
வரைஞர்கள் (சிவில்/சமிக்ஞை/இயந்திரவியல்) பயிற்சியளித்தல் தரம்

02. பதவியில் கடமையின் தன்மை
இலங்கை புகையிரத திணைக்களத்தில் புகையிரத மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் தொழிநுட்ப சேவையில் வரைஞர்கள் (சிவில்), வரைஞர்கள் (சமிக்ஞை), வரைஞர்கள் (இயந்திரவியல்) பதவிகளுக்கு தனித்தனியே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள கடமைப் பட்டியலுக்கமைய கடமைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

03. சம்பள அளவுத்திட்டம் MN-03 2025

I. அரச நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் படி ரூ. 52250 - 10x800 - 11x1190 - 10x1320 - 10x1350 – 100040/- ஆகுமென்பதோடு ரூ.52250/ எனும் ஆரம்ப சம்பள நிலையில் வைக்கப்பட்டு செலுத்தல்கள் மேற்கொள்ளப்படும்.
II. இதற்கு மேலதிகமாக அரச ஊழியர்களுக்காக ஆரம்ப சம்பளத்திற்கு மேலதிகமாக செலுத்தப்படுகின்ற கொடுப்பனவுகள் தொடர்பிலும் உரித்துடைமை காணப்படுகிறது.

04. (அ) கல்விசார் தகைமைகள்
:

I. கல்வி பொது தராதர (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ்./ஆங்கிலம் மொழி, கணிதம் , விஞ்ஞானம் மற்றும் வேறேதேனும் ஒரு பாடத்திற்கு திறமை சித்தியுடன் ஆறு பாடங்களில் (06) ஓரே தடவையில் சித்தி பெற்றிருத்தல்.

மற்றும

ii. க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் இணைந்த கணிதம் மற்றும் பௌதீகவியல் உள்ளடங்கிய பௌதீகவியல்விஞ்ஞான பாடப்பரப்பிற்குரிய மூன்று பாடங்களில் (பொது அறிவு பரீட்சையை தவிர்த்து) ஓரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

iii. க.பொ.த.(உயர்தர) பரீட்சையில் பொறியியல் தொழிநுட்பம் உள்ளடங்கிய தொழிநுட்பவியல் பாடப்பரப்பிற்குரிய மூன்று பாடங்களில் (பொது அறிவு பரீட்சையை தவிர்த்து) ஓரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

(ஆ) தொழில்சார் தகைமைகள்

மூன்றாம் மட்ட மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழிநுட்ப கல்லூரியொன்றில் வரைதல் தொடர்பில் ஒரு வருட முழுநேர பாடநெறியினை வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழினை பெற்றிருத்தல்.

(இ) அனுபவம் – ஏற்புடையதல்ல

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

(ஈ) உடற்சார் தகைமைகள் :

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை புரிவதற்க்கும் பதவியில் கடமை புரிவதற்கும் தேவையான உடல் மற்றும் உள தகைமைகளை கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

(உ) வயது

2026.12.14 ஆம் திகதிக்கு 18 வயதுக்கு குறையாத மற்றும் 30 வயதினை விஞ்சாத வகையில் இருத்தல் வேண்டும்.

(ஊ) வேறு தகைமைகள் :

i. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்
ii. விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தையை கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும்
iii. யாதாயினும் மத பீடத்தில் துறவறத்தை பூண்டுள்ள எந்தவொரு நபரும் இப் பரீட்சை தொடர்பில் தோற்றுவதற்கு தகைமையற்றவராவார்

குறிப்பு – 2026.12.14 திகதிக்கு மேற்கூறிய அனைத்து தகைமைகளையும் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

05. ஆட்சேர்ப்பு செய்யும் முறைமை :

எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை மற்றும் பொது நேர்முக பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்து மூலப் பரீட்சையில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரிகளின் மொத்த புள்ளிகளின் திறமை முறைக்கமைய ஆட்சேர்ப்பு செய்ய எதிர்பார்க்கப்படுகின்ற எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையானோர் பொது நேர்முக பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர். இங்கு காத்திருப்பு பட்டியல்களில் வைத்து ஆட்சேர்ப்பு செய்யப்பட மாட்டாது.

06. ஆட்சேர்ப்பு பரீட்சையின் பரீட்சை நடைமுறை

i. பரீட்சை முறை

(அ) இப் பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடைப்பெறும்.

(ஆ) அனைத்து வினாத்தாள்களுக்கும் மேலே(04) இன் கீழ் கோரப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மொழியிலேயே தோற்ற வேண்டும். விண்ணப்பித்த பரீட்சை மொழி மூலத்தினை மாற்றுவதற்கு பின்னர் அனுமதி வழங்கப்பட மாட்டாது.

ii. பரீட்சையின் பாடங்கள்

1. நுண்ணறிவு பரீட்சை - காலம் 01 மணித்தியாலயம் - 100 புள்ளிகள்

2. விடயம் தொடர்பிலான தொழிநுட்ப பரீட்சை -காலம் 03 மணித்தியாலங்கள் – 100 புள்ளிகள்

(எழுத்து மூல வினாப்பத்திரம் தொடர்பில் சித்தியடையும் புள்ளிகள் 40% ஆகும்.)

iii. பாட விதப்புரை

பாட இலக்கம் 01 – நுண்ணறிவுப் பரீட்சை

விண்ணப்பதாரியின் சிந்தனை வாத திறமை மற்றும் சரியான நிகழ்வினை அனுமானிப்பதற்கான திறமை, தீர்மானத்தினை மேற்கொள்ளும் திறமை என்பவை பரீட்சிக்கப்படும்.

பாட இலக்கம் 02 – விடயம் தொடர்பிலான தொழிநுட்ப பரீட்சை
வரைதலின் அடிப்படை கொள்கைகள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்படும்

iv. தெரிவு செய்யும் முறைமை

எழுத்து மூல பரீட்சையில் 40% புள்ளிகள் வீதம் அல்லது அதற்கு மேலதிகமாக பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகள் பரீட்சையில்சித்திபெற்றவர்களாகககருதப்படுவர்.புள்ளிகளைபெற்றுக்கொண்டமுறைமைக்கமையதொகுக்கப்பட்டு வெற்றிட எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கைக்கு அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்துள்ளவர்களில் பொது நேர்முக பரீட்சைக்கு உட்படுத்தி தெரிவு செய்யப்படுவர், இவ் நேர்முக பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படாததுடன் விண்ணப்பக் கோரலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என பரீட்சிக்கப்படும்.

v. பரீட்சை பெறுபேறுகள்

வர்த்தமானி அறிவித்தலில் 06(iv) பந்திக்கமைய உயர் புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரிகளின் மொத்தபுள்ளிகளின்திறமைக்கமையதயாரிக்கப்பட்டபெறுபேறுஅட்டவணைபுகையிரதபொதுமுகாமையாளரிடம் கையளிக்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் பெறுபேறுகள் அறிவிக்கப்படும்.

07. பரீட்சைக் கட்டணம்

பரீட்சைக் கட்டணம் ரூ-/1200.ஆகும். இக் கட்டணமானது விண்ணப்பங்களை ஏற்கின்ற இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் புகையிரத பொதுமுகாமையாளரது மக்கள் வங்கியின் நகர மத்திய கிளையில் கணக்கு இல 176-100129027-313 எனும் கணக்கிற்கு வரவு வைக்கப்படும் வகையில் எந்தவொரு மக்கள் வங்கி கிளைக்கும் செலுத்தப்படலாம். அதற்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டினை ஏற்புடைய விண்ணப்பத்தில் குறித்த கூட்டினுள் கழறாத வண்ணம் ஒட்ட வேண்டும். (பற்றுச்சீட்டின் நகற்பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் நன்மை பயக்கும்) பரீட்சை தொடர்பில் செலுத்தப்பட்ட தொகையானது எந்தவொரு காரணத்தினை முன்னிட்டும் மீள திருப்பியளிக்கப்பட மாட்டாது என்பதோடு காசுக் கட்டளைகள் மற்றும் முத்திரைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது

08. விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பமானது இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கமைய தயாரிக்கப்பட வேண்டுமென்பதுடன் அனைத்து விண்ணப்ப படிவங்களும் A4 அளவிலான தாளில் விண்ணப்பத்தில் இலக்கம் 01 தொடக்கம் 07 வரையான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும் 08 தொடக்கம் 10 வரையிலானவை இரண்டாம் பக்கத்திலும் 11 தொடக்கம் 13 வரையிலானவை மூன்றாம் பக்கத்திலும் ஏனையவை 04 ஆம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பமானது தயாரிக்கப்பட வேண்டும் என்பதை விசேடமாக கவனிக்கவும். இதற்காக கணனியில் தயாரிக்கப்பட்ட/தட்டச்சு இயந்திரத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பாவிக்கப்படலாம். மாதிரிக்கு ஒவ்வாத விண்ணப்பங்கள் , பூரணமற்ற முறையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் என்பன எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படுவதால் விண்ணப்பத்தினை முன்வைப்பதற்கு முன்னர் அது பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஒத்து காணப்படுகின்றதா மற்றும் அனைத்து தகவல்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பமானது முறையாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும் குறித்த பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் விபரங்கள் விண்ணப்பத்தில் உள்ளடக்கப்பட்டு பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் மீண்டும் பரிசிலித்து பார்க்க வேண்டும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் நகல் மற்றும் ஏற்புடைய பற்றுச்சீட்டின் நகற்பிரதியினை தம்வசம் வைத்திருத்தல் நன்மை பயக்கும்.

(அ) விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கு தோற்ற எதிர்பார்க்கும் மொழி மூலத்திலேயே விண்ணப்பத்தினை நிரப்ப வேண்டும் விண்ணப்பத்தினை தயாரிக்கையில் விண்ணப்ப தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பத்தில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் இடப்படுதல் அத்தியாவசியமாகும்.

(ஆ) பரீட்சை தொடர்பில் சரியாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2026.12.14 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தினை இடும் உறையின் இடது பக்க மூலையின் மேல் "இலங்கை புகையிரத திணைக்களத்தில் புகையிரத மேற்பார்வை முகாமை உதவியாளர் தொழிநுட்ப சேவையில் வரைஞர்கள்(சிவில்/சமிக்ஞை/இயந்திரவியல்) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2026" என குறிப்பிடப்பட வேண்டும். அத் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் எந்தவொரு விண்ணப்பமும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

புகையிரத பொதுமுகாமையாளர்,
புகையிரத பொதுமுகாமையாளர் அலுவலகம்,
நியமனக் கிளை
த.பெ..355
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

(இ) விண்ணப்பத்தில் மற்றும் பரீட்சை தொடர்பிலான நுழைவுச்சீட்டில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபரொருவர், சமாதான நீதவானொருவர், சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாளரொருவர், சட்டத்தரணியொருவர், பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ் ஒருவர், முப்படையில் அதிகாரமுடைய உத்தியோகத்தரொருவர் , பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியையுடைய உத்தியோகத்தரொருவர் அல்லது அரச சேவையில் நிரந்தர பதவியினை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(ஈ) பூரணமற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடுகையில் விண்ணப்பமொன்று தொலைதல் மற்றும் தாமதமாதல் தொடர்பில் எந்தவித முறைப்பாடுகளும் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(உ) விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை தொடர்பில் அறிவிக்கப்பட மாட்டாது

விண்ணப்பதாரிகளுக்கு எழுத்துப் பரீட்சை தொடர்பில் நுழைவுச் சீட்டுக்கள் வழங்கப்பட்ட உடனே இது குறித்து அறிவித்தலொன்று பத்திரிகைகளில் மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் இணையத்தளத்தின் ஊடாக அறிவிக்கப்படும். அறிவித்தல் வெளியாகி 02 அல்லது 3 நாட்கள் சென்ற பிறகும் தமது நுழைவுச்சீட்டு கிடைக்கப் பெறவில்லையெனின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது குறித்து இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும். அவ்வாறு தெரிவிக்கையில் விண்ணப்பித்த பரீட்சை, விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை சரியாக குறிப்பிட வேண்டும். கொழும்பிற்கு வெளியே வசிக்கும் விண்ணப்பதாரியாயின் மேலே குறிப்பிட்ட விடயங்களுடன் தொலைநகல் ஊடாக பரீட்சை நுழைவுச்சீட்டின் பிரதியினை அனுப்பி வைப்பதன் பொருட்டு உமது தொலைநகல் இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரல் கடிதமொன்றினை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்தின் ஊடாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு அனுப்பி வைப்பதன் மூலம் உசாவுதலை மேற்கொள்வது மிகவும் செயற்திறன் மிக்கதாக அமையும் .மேலும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் கேட்கப்படுகின்ற தேவையான தகவல்களை உறுதி செய்துகொள்ளும் பொருட்டு விண்ணப்பதாரியினால் தங்களிடம் வைத்துக் கொண்ட விண்ணப்பத்தின் பிரதி, செலுத்திய பரீட்சை கட்டணத்திற்கு ஏற்புடைய பற்றுச்சீட்டின் பிரதி, விண்ணப்பத்தினை தபாலிடுகையில் பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு என்பவற்றினை கைவசம் வைத்திருப்பது நன்மை பயக்கும்.

09. பரீட்சைக்குத் தோற்றல்

(அ) விண்ணப்பகோரல் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை கொண்டவர்கள்

மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் எனும் எண்ணக்கருவின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையினுள் விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் குறித்த பரீட்சை கட்டணத்தினை செலுத்தி அதற்கு ஏற்புடைய பற்றுச்சீட்டுடன் முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை முன்வைத்துள்ள அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் பரீட்சை நுழைவுச்சீட்டுக்கள் அனுப்பி வைக்கப்படும். தமது நுழைவுச்சீட்டுக்களை முன்வைக்க தவறுகின்ற விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது

(ஆ) விண்ணப்பதாரி தமக்கு வழங்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்கு தோற்ற

வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் குறித்த பரீட்சை மண்டபத்திற்கு ஏற்புடைய நுழைவுச்சீட்டில் கையொப்பத்தினை உறுதி செய்து கொண்டு பரீட்சை மண்டபத்தில் தோற்றுகின்ற முதல் நாளிலேயே அதன் மண்டலாதிபதியிடம் பொறுப்பளிக்க வேண்டும். அனைத்து விண்ணப்பதாரிகளும் பின்பற்ற வேண்டிய விதிகள் இவ்வறிவித்தலின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு – விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை நுழைவுச்சீட்டு வழங்கப்படுவது அவர் பரீட்சைக்கு தோற்றவோ அல்லது பதவியொன்று தொடர்பில் தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாகவோ ஏற்றுக்கொள்ளவதாக கருதப்பட மாட்டாது.

10. விண்ணப்பதாரியின் ஆளடையாளம்

விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற அனைத்து பாடங்கள் தொடர்பிலும் பரீட்சை மண்டலாதிபதி திருப்தியடையும் வகையில் தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டும். அது தொடர்பில் பின்வரும் ஏதேனுமொரு ஆவணம் ஏற்றுக்கொள்ளப்படும்..

a) தேசிய அடையாள அட்டை
b) செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு
c) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்

Gazette.lk AMBITIONS REALIZED SINCE 2014

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய வகையில் முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாமல் பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதி செய்ய மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்திற்கு உள்ளெடுக்கப்பட மாட்டார்கள்.

மேலும் பரீட்சை மண்டபத்திற்கு உட்பிரவேசித்த நொடியில் இருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை முகம் மற்றும் காதுகள் இரண்டையும் மூடாது இருத்தல் வேண்டும்.

11. பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வழங்குதல் தொடர்பில் இலங்கை

அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற விதிமுறைகளுக்கு விண்ணப்பதாரிகள் கீழ்படிய வேண்டும். அவ்விதிகளை மீறினால் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டணைக்கு உட்பட நேரிடும்.

12. சேவை நிபந்தனைகள்
வரைஞர்(சிவில்)/ வரைஞர் (சமிக்ஞை)/ வரைஞர்(இயந்திரவியல்) பதவிகளுக்கு இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் ஒரு வருட பயிற்சி காலத்திற்கு கீழ்படிய வேண்டியிருப்பதுடன் பயிற்சியளித்தல் தரத்திற்கான கொடுப்பனவுகள் அரச நிர்வாக சுற்றறிக்கை 10/2025 அட்டணை V இற்கு அமைவானவையாக காணப்படும் . பயிற்சி நிறைவின் பின்னர் பயிற்சி நிறைவு பரீட்சை நடாத்தப்படுவதோடு அதில் தேர்ச்சியடைபவர்கள் ஏற்புடைய பதவியில் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் குறித்த சம்பள அளவுதிட்டத்தில் ஆரம்ப சம்பள மட்டத்தில் வைக்கப்படுவர்.

13. சேவையில் இணைத்துக்கொள்வதற்கான நிபந்தனைகள்

I. இப்பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதியத்தை கொண்டது. ஏற்கனவே விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய கொடுப்பனவிற்கு பங்களிப்பு செய்பவர் எனின் தொடர்ந்தும் அதற்கு பங்களிப்பு நிதியினை செலுத்த வேண்டும்.

II. நியமனம் தொடர்பில் தகைமையினை பெற்ற மொழி மூலத்திற்கமைய 2020.10.16 ஆம் திகதிய அரச நிர்வாக சுற்றறிக்கை 18/2020 மற்றும் அதற்கு இடைநேரான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய ஏற்புடைய அரசகருமமொழி தொடர்பில் தேர்ச்சியினை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

III. தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் தாபனக்கோவையில் மற்றும் நிதி பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமையவும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட நடைமுறை விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கமையவும் கீழ் படிந்து சேவை செய்ய வேண்டும். அவ்வாறே காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற கட்டளைகள் தொடர்பில் திணைக்கள அறிவுறுத்தல்களுக்கு கீழ் படிந்து சேவையாற்ற பொருந்தியுள்ளீர்.

14. i. இவ் ஆட்சேர்ப்பு தொடர்பில் இலங்கை புகையிரத திணைக்களத்தின் புகையிரத மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (MN-03) தொழிநுட்ப சேவை தொடர்பிலான ஆட்சேர்ப்பில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள அனைத்து ஏற்பாடுகளும் ஏற்புடையதாகும் என்பதையும் அறியத் தருகின்றேன். .

ii. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பிலான இறுதி தீர்மானத்தினை மேற்கொள்ளும் அதிகாரம் புகையிரத பொதுமுகாமையாளருக்கே உள்ளது

iii. இவ் அறிவித்தலானது சிங்கள மற்றும் தமிழ் , மொழிகளில் வெளியிடப்படுவதோடு யாதேனுமொரு பொருத்தப்பாடற்ற தன்மை காணப்படின், அச்சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலம் வெளியிடப்படும் அறிவித்தல் சரியானது எனக்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ரவிந்திர பத்மபிரிய
புகையிரத பொதுமுகாமையாளர்

.....ஆம் திகதி
புகையிரத பொதுமுகாமையாளர் அலுவலகம்,
இலங்கை புகையிரத திணைக்களம்.,
த.பெ..355
ஓல்கொட் மாவத்தை,
கொழும்பு 10.